www.tamilarangam.net

# பௌத்த சிங்கள பேரினவாத அரசின்,

# கொலை வெறியின் 10வது ஆண்டு

ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டு இன்று 10 ஆண்டுகள் கடந்துவிட்டது. 1993 யூலை 23ல் பௌத்த சிங்கள இனவெறி அரசினால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட இனக்கலவரமானது இன்று தமிழ் தேசிய இனத்தை அழித்துவிடுமளவுக்கு வளர்ந்துள்ளது. அன்று சில ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், பல கோடி சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டும், எரிக்கப்பட்டும், தமிழ் தேசியஇனத்தின் பொருளாதாரத்தை சிதைக்கமுனைந்தது. மனிதநாகரீகமே வெக்கித்தலைகுனியும் வண்ணம் சிறீ லங்கா அரசவதைமுகாமில் 53 தமிழ் சிறைக்கைதிகளை சித்திரவதை செய்து கண்கள் பிடுங்கப்பட்டும் வெட்டியும் படுகொலைசெய்து தமிழ் தேசியத்தை அடக்க முயன்றது.

1983களில் தமிழ் தேசிய இனத்தின்மீது நடாத்தப்பட்ட மிருகத்தனமான அடக்கு முறையைத்தொடர்ந்து தமிழ் தேசிய எழுச்சியானது வீறுகொண்டது. சிங்கள தேசியவெறி தமிழ் மக்கள்மீது காட்டுமிராண்டித்தனமான இன அழிப்பை தொடங்கியதை அடுத்து பல அமைப்புக்கள் உருவாகின. அதில் இணைந்துகொள்ள பல ஆயிரம் இளைஞர்கள், யுவதிகள் மக்கள் ஆதரவுடன் தமிழ் தேசிய விடுதலைப்போராட்டத்திற்காக தம்மையும் இணைத்துக்கொண்டனர்.

இவ்விளைஞர்களின் தியாகங்களும், உணர்வுகளும் இன்று சிதைக்கப்பட்டு, புலிகளின் தேசிய வெறியாக மாறி அது பாசிசமாகிச் சீரளிந்துள்ளது. அன்றும் இன்றும் போராடப்புறப்படும் ஒவ்வொரு இளைஞர்களின் தியாகத்தையும் ஏகாதிபத்திய நலன்களைக்காப்பாற்ற பயன்படுத்துகின்றனர். 1983இன் தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்தின் எழுச்சியில் உந்தப்பட்ட தியாகிகளின் உட்படுகொலைகள், மாற்று இயக்க அழிப்புகள், கிராமங்களில் இருந்த நியாய விரும்பிகள் மற்றும் ஜனநாயகவாதிகள் கொல்லப்பட்டும், மக்களின் தேசிய உணர்வுகள் துப்பாக்கிமுனையில் அடக்கப்படுகின்றது.

தமிழ்த்தேசியவிடுதலைப்போராட்டத்தினை சிங்கள இனவெறி அரசு, தமிழ் துரோகிகளை அரவணைத்து, அவர்களை கைக்கூலிகளாகப்பயன்படுத்துவதன் மூலமும் சிதைத்து வருகின்றது. தமிழ் துரோகக் குழுக்கள் இந்தியா, இலங்கை என்று நக்கிப்பிழைக்கும் தொழிலை சிறப்பாகச்செய்தபடி மக்களின் முதுகில் குத்திவருகின்றனர். தமிழ் மக்களின் தேசியவிடுதலையை கொச்சைப்படுத்திவரும் இந்தத்துரோகிகளை மக்கள் மன்னிக்கமாட்டார்கள்.

புலிகள் முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதுடன் அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களையும் அபகரித்து, அவர்களின் உடமைகளை கொள்ளையடித்ததன் மூலமும் தமிழ்மக்களின் தேசிய விடுதலை போராட்டத்தையே கேள்விக்குள்ளாக்கியுள்ளனர்.

இன்று கூர்மையடைந்துள்ள இனங்களுக்கிடையிலான முரண்பாடு தமிழ் மக்களின் தேசியவிடுதலையை கோரிநிற்கின்றது. அதை புலிகள் துப்பாக்கிமுனையில் அடக்கி, ஒடுக்கி தமது சொந்தநலன்களின் அடிப்படையிலான நோக்கத்துடன், அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகளுக்கு பாய்விரித்துள்ளதுடன், சிங்கள இனவெறி அரசுடன் நடாத்தும் பேச்சுவார்த்தைகளை தமிழ் மக்கள்முன் உத்தியோக பூர்வமாக வெளியிட மறுப்பதுடன், இதுதொடர்பாக கேள்வி எழுப்புவோரையும் அழித்துவருகின்றனர்.

மக்களே!

1983இல் சிங்கள இனவெறி அரசின் இன அழிப்பு நடவடிக்கையானது தீவிரப்படுத்தப்பட்டு இன்று மொத்த சமூகத்தையுமே சீரளித்துவிடமுனையும் இன்றைய நிலையில், தமிழ்தேசிய விடுதலைப்போராட்டத்தை காட்டிக்கொடுக்க முனையும் புலிகளின் கைகளிலிருந்து, மக்களின் கைகளுக்கு போராட்டத்தை மாற்றுவதன் தேவை இன்று எம் எல்லோர் முன்நிலையிலும் உள்ளது.

பௌத்த சிங்கள இனவெறி அரசே:

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைக்கொடு!
பொருளாதாரத்தடையை நீக்கு!
யுத்தத்தை நிறுத்து!

புலிகளே:

தேசிய விடுதலையை காட்டிக்கொடுக்காதே!
மக்களுக்கு கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தை கொடு!
சமரசங்களை நிறுத்து!

தமிழ் துரோகிகளே:

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு துரோகம் செய்யாதே!
மக்கள் மீதான படுகொலை, சித்திரவதைகளை நிறுத்து!
அரசுடன் கூடிக்குலவுவதை நிறுத்து!

-மூன்றாவது பாதை-
23.07.1993

பிரசுர இல: 01

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்